**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 153 of 2014

Deposition of witness for { Prosecution PW5
Defence
Court

Name : பட்டமுத்து
Father Name : சின்னகனி
Village :விருதுநகர்
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :49

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of March 2026.

எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு.317 கு.வி.மு.ச.வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

__முதல் விசாரணை -__

1) நான் தற்போது விருதுநகர், பர்மா காலனியில் குடியிருந்து, ஆட்டோ ஓட்டும் வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் ராமதாஸ் மற்றும் 1 முதல் 3 எதிரிகளை தெரியும். 13.09.2013 ம் தேதி காலை 9.00 மணியளவில் ஆட்டோவில் சவாரி ஏற்றிக்கொண்டு விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அரசு மருத்துவமனை அருகே ராமதாஸ்–ஐ காவல் ஆய்வாளர் மூக்கன், சுரேஷ் குமார், பார்த்திபன் ஆகியோர்கள் கழுத்தை பிடித்து நீ பெரிய வெண்ணையாடா எனக்கூறி 3 பேரில் ஒருவர் நெஞ்சில் குத்தினார், மற்ற 2 நபர்களும் அவரை எத்தினார்கள். ராமதாஸ் கீழே விழுந்துவிட்டார். சுமோ கார் வந்தது. அதில் ராமதாஸ்–ஐ ஏற்றி சென்றுவிட்டார்கள். நான் அருகில் உள்ளவர்களிடம் விசாரித்ததில் விநாயகர்சிலை வைத்தது சம்மந்தமாக ராமதாஸ்–க்கும் போலிசாருக்கும் பிரச்சனை இருந்தது தெரியவந்தது. பின்னர்

நான் சவாரி சென்றுவிட்டேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

**2)** ராமதாஸ்–ஐ எனக்கு 20 வருடமாக தெரியும். ராஜா, அருள்ராஜ் மற்றும் கண்ணன் ஆகியோர்களை தெரியும், ஆண்டனி, ராமச்சந்திரன், ஈஸ்வரன் ஆகியோர்களை தெரியாது. ராம்தாஸ் சோப்பு வியாபாரம் பார்த்தார், சவாரிக்கு வரும் போது பழக்கம். சுப்பையா நாடார் பள்ளி விருதுநகர் அரசு மருத்துவமனையில் இருந்து பாண்டியன் நகர் செல்லும் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி செல்லும் சாலையில் வலது பக்கம் உள்ளது என்றால் சரிதான். அந்த பள்ளிக்கு எதிரே பஸ் ஸ்டாப் மற்றும் டீக்கடை உள்ளது என்றால் சரிதான். பள்ளிக்கு எதிரே கிழக்கில் இருந்து மேற்கு செல்லும் ரோட்டில் வலதுபுறம் அரசு மருத்துவமனை அதன் எதிர்புறம் மகப்பேறு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். அதனைச்சுற்றி இருபுறமும் கடைகள் உள்ளது என்றால் 2, 3 கடைகள் இருக்கும். ஆட்டோ ஸ்டாண்டு உள்ளது. அந்த பகுதியில் எந்நேரமும் ஆட்கள் சென்று வருவார்கள் என்றால் மருத்துவமனை மற்றும் பாண்டியன் நகர் செல்லும் நபர்கள் அவ்வழியாக செல்வார்கள். நான் சம்பவத்தன்று அவசர சிகிச்சை பிரிவில் பயணியை இறக்கி விட வந்தேன். சுப்பையாநாடார் பள்ளியில் இருந்து அவசர சிகிச்சைபிரிவு சுமார் 200 –300 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

**3)** சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் ராமதாஸ்–ஐ அடித்து கொண்டு இருக்கும் போது பார்த்தேன், அதன் பின்னர் நான் பயணியை இறக்கி விட சென்று விட்டேன். ராமதாஸ்–ஐ காவல் ஆய்வாளர் மூக்கன், சுரேஷ் குமார், பார்த்திபன் ஆகியோர்கள் கழுத்தை பிடித்து நீ பெரிய வெண்ணையாடா எனக்கூறி 3 பேரில் ஒருவர் நெஞ்சில் குத்தினார் என்றும் மற்ற 2 நபர்களும் அவரை எத்தினார்கள் என்றும் ராமதாஸ் கீழே விழுந்துவிட்டார் என்ற விபரத்தை நான் ஏற்கனவே அளித்த சாட்சியத்தில் சொல்லியுள்ளேன். இவர்கள் தாக்கியதில் ராமதாஸ்–க்கு காயம் ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது. நான்

முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், அ.சா.1 ராமதாஸ்– எனக்கு 20 வருடம் பழக்கம் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 153 of 2014

Deposition of witness for { Prosecution PW6
Defence
Court

Name : கண்ணன்
Father Name : முத்தையா
Village :விருதுநகர்
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :52

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of March 2026.

எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு.317 கு.வி.மு.ச.வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது விருதுநகர், பாண்டியன் நகரில் குடியிருந்து டெயிலராக வேலை பார்த்து வருகிறேன். புகார்தாரர் ராமதாஸ் மற்றும் 1 முதல் 3 எதிரிகளை தெரியும். 13.09.2013 ம் தேதி காலை 8.45–9.00 மணியளவில் அரசு மருத்துவமனை வழியாக சென்று கொண்டிருந்தேன். அங்கு கூட்டமாக இருந்ததால் வண்டியை நிறுத்தி பார்த்தேன். ராமதாஸ்–ஐ மூக்கன், சுரேஷ்குமார் மற்றும் பார்த்திபன் ஆகியோர்கள் அடித்து கொண்டிருந்தனர். கழுத்தை பிடித்து நெறித்தனர், ஷீ–வால் மிதித்தனர். துப்பாக்கியை நெற்றியில் வைத்தனர். 3 பேரும் ராமதாஸ்–ஐ வண்டியில் ஏற்றி அழைத்து சென்றனர்.பின்னர் நான் அங்கு இருந்து சென்று விட்டேன். விநாயகர் சதுர்த்தி பிரச்சனை சம்மந்தமாக மேற்படி 3 பேரும் ராமதாஸ்–ஐ அடித்ததாக சொன்னார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2) நான் ஏற்கனவே இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. ராமதாஸ்–ஐ எனக்கு 15 வருடமாக தெரியும். அவர் பாண்டியன் நகரில் இந்து முன்னணி அமைப்பில் பொறுப்பில் இருந்தார். பட்டமுத்து, ராஜா, அருள்ராஜ், ஈஸ்வரன், ராமச்சந்திரன் ஆகியோரை எனக்கு தெரியும். சம்பவ இடத்தில் சுமார் 5–6 நபர்கள் இருந்தார்கள். ராமதாஸ் உடன் ராஜா, அருள்ராஜ், பாண்டி ஆகியோர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். ராமதாஸ்–க்கு காயம் இருந்ததா என்று எனக்கு தெரியாது. 3 பேரும் ஷீ–வால் மிதித்து, துப்பாக்கியை ராமதாஸ் நெற்றியில் வைத்ததாக ஏற்கனவே சாட்சியம் அளித்தேனா என்று ஞாபகம் இல்லை. அந்த இடம் போக்குவரத்து அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். பட்டமுத்து, ராஜா, அருள்ராஜ், ஈஸ்வரன், ராமச்சந்திரன் ஆகியோரை தவிர வேறு 4 நபர்கள் இருந்தனர் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. இவர்களை தவிர வேறு யாரும் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், ராமதாஸ் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர் அழைத்ததின் பேரில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராமதாஸ் போனில் அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்தேன். போலிசாரும் சாட்சியம் அளிக்க வருமாறு எனது தம்பியிடம் சொல்லியுள்ளனர்.